வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 26.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வறுமையை ஒழித்து பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்தியா செயல்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கழிவுநீர்த் தொட்டிகளை பாதுகாப்பான முறையில் சுத்திகரிப்பது குறித்து, புதுச்சேரியில், இன்று நடைபெற்ற, துப்புரவு பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

சர்வதேச யோகா தின விழாவிற்கான முன்னோட்டமாக புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ள யோகா தின விழாவை மத்திய அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தொடக்கி வைக்கிறார்.

ஜிப்மரில், புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு கட்டிடத்ததையும், மத்திய இணை அமைச்சர் நாளை, நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

------------------------

மோடி 1 (10)

இந்தியாவிற்கு ஊறு விளைவிப்பதே பாகிஸ்தானின் குறிக்கோளாக உள்ள நிலையில், வறுமையை ஒழித்து பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்தியா செயல்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். பாதுகாப்புப் படைகள் வலுவடைந்தால்தான், பொருளாதாரம் வலுப்பெறும் என்பதால், சுயசார்பு இந்தியா என்னும்

நோக்குடன், பாதுகாப்புப் படைகளையும் வலுப்படுத்த அரசு பாடுபட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம் தாஹோட் பகுதியில், இன்று பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை 140 கோடி இந்தியர்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதே தவிர, வெறும் ராணுவ நடவடிக்கை அல்ல என்றார். இது குறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

மோடி 2 (17)

கடந்த 11 ஆண்டுகளில், தமது அரசு மேற்கொண்ட முக்கிய முயற்சிகளால், நாடு ஒவ்வொரு துறையிலும் முன்னேறி இருப்பதாக தாஹோட் பொதுக் கூட்டத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். உற்பத்தித் துறையில் இந்தியா விரைந்து முன்னேறி வருவதாகவும், தற்போது மொபைல் ஃபோன் முதல், ராணுவ ஆயுதங்கள் வரை, இந்தியாவில் தயாரிக்கப் படுவதாகவும் அவர் கூறினார். இந்தியாவில் தயாரிக்கப்படும் ரயில் இஞ்சின்களும், மெட்ரோ உட்பட, இந்தியாவில் உருவாக்கப்படும் முக்கிய தொழில்நுட்பங்களும் தற்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, வதோதராவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி சாலை பவனி ஒன்றை நடத்தி, 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், குஜராத் மாநிலத்திற்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் தொடக்கி வைத்தார். வெராவல்-அகமதாபாத் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலையும், வல்சத்-தாஹோட் எக்ஸ்பிரஸ் ரயிலையும் அவர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். தாஹோடில், ரயில்வே துறை சார்பில் நிறுவப் பட்டுள்ள ரயில் எஞ்சின் உற்பத்தி ஆலையையும் அவர் திறந்து வைத்து, இந்த ஆலையில் தயாரிக்கப்பட்ட முதலாவது ரயில் எஞ்சினை இயக்கி வைத்தார்.

-----------------------

*பரம் வீர் சக்ரா* 1 (7)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1965ஆம் ஆண்டு இந்தோ- பாக் போரில் நாட்டிற்காக உயிர்தியாகம் செய்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, லெப்டினென்ட் கர்னல் A.B தாராப்பூர் குறித்து ஒரு தொகுப்பு......

(வாய்ஸ்)

*பரம் வீர் சக்ரா* 2 (18)

1923ஆம் ஆண்டு மும்பையில் பிறந்தவரான லெப்டினென்ட் கர்னல் A.B தாராப்பூர், 1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், பூனா குதிரைப் படைப் பிரிவல் சேர்க்கப்பட்டவர் ஆவார். 1965ஆம் ஆண்டு, இந்தோ- பாக் போரின் மிகப் பெரிய பீரங்கிச் சண்டை, சியால்கோட் பிரிவில் உள்ள ஃபில்லோரா என்ற இடத்தில் நடைபெற்றது. கலோய் – ஃபில்லோரா அச்சுப் பாதையில், இந்திய ராணுவத்தினர் தெற்கு நோக்கி முன்னேறிய போது, லெப்டினென்ட் கர்னல் A.B தாராப்பூர் தலைமையிலான குதிரைப் படைப் பிரிவினர், இந்தியப் படைகளின் வலது விளிம்பாக செயல்பட்டனர். ஃபில்லோரா பகுதியை கைப்பற்றுவதற்கான முக்கிய அரணாக செயல்படும் பொறுப்பு, தாராப்பூர் தலைமையிலான படைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. ஃபில்லோரா பகுதியை பின்னால் இருந்த தாக்க தீர்மானிக்கப் பட்ட நிலையில், ஃபில்லோரா-சாவிண்டா இடையே தாராப்பூர் தலைமையிலான குதிரைப் படையினர், வாசீர்வாலி என்ற இடத்தில் இருந்து, எதிரிப் படையினரின் திடீர் தாக்குதலுக்கு ஆளாகினர். லெப்டினென்ட் கர்னல் தாராப்பூர் இந்த தாக்குதலை துணிச்சலாக எதிர்கொண்டு, காலாட் படையின் ஆதரவுடன் ஃபில்லோரா பகுதியை தாக்கினார். எதிரிப் படையினரின் தொடர்ச்சியான குண்டு வீச்சு மற்றும் பீரங்கி தாக்குதலுக்கு இடையிலும், தாராப்பூர் சற்றும் மனம்

*பரம் வீர் சக்ரா 3 (16)*

தளராமல், தமது முயற்சிகளில் முனைப்புடன் தொடர்ந்து ஈடுபட்டார். இந்நடவடிக்கையின் போது அவர் மோசமாக காயமடைந்த போதிலும், போர் களத்திலிருந்து அகற்றப்பட மறுத்து, தமது படைப் பிரிவினரை தொடர்ந்து வழிநடத்தி சென்றதால், ஆசீர்வாலி கைப்பற்றப் பட்டது. அதை தொடர்ந்து, ஜஸ்சுரோன், புட்டூர்-தொங்ராதி ஆகிய பகுதிகளும் இந்தியப் படைகளின் கைவசம் ஆயின. கடுமையான சண்டையின் போது, லெப்டினென்ட் கர்னல் தாராப்பூரின் பீரங்கி வாகனமும், அடுத்தடுத்து பலமுறை தாக்கப்பட்டது. அப்படியும் அவர் அஞ்சாமல், களத்தில் தொடர்ந்து செயல்பட்ட விதத்தினால், படைப்பிரிவினர் பேரூக்கம் பெற்று, எதிரிப் படைகளை பலமாகத் தாக்கி, அவர்களின் 60 பீரங்கி வண்டிகளை அழித்தனர். 6 நாட்களாக நடைபெற்ற சண்டையின் போது, உடலில் ஏற்பட்ட காயங்களால், பின்னர் லெப்டினென்ட் கர்னல் உயிர்த் தியாகம் செய்தார். போர்க் களத்தில் அபாரத் துணிச்சலுடன், இந்திய ராணுவத்தின் உன்னத மரபுகளை காக்கும் வகையில் செயல்பட்டதற்காக லெப்டினென்ட் கர்னல் A.B தாராப்பூருக்கு, மரணத்திற்கு பிந்தைய முறையில், பரம் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. அவருக்கு நாடு தலை வணங்குகிறது.

------------------------

*நமஸ்தே 1 (9)*

மத்திய அரசின் நமஸ்தே திட்டத்தின் கீழ், இயந்திரங்கள் மூலம் பாதுகாப்பான முறையில் கழிவுநீர்த் தொட்டிகளை சுத்திகரிப்பது குறித்து, புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, துப்புரவு பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறையை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார். கழிவுநீர்த் தொட்டிகளை சுத்தம் செய்வதற்கான ரோபோ இயந்திரத்தையும் அவர் இயக்கி வைத்தார். புதுச்சேரி நகராட்சியில், கருணை அடிப்படையில் வாரிசுகளுக்கு வேலை வழங்க

நடவடிக்கை எடுக்கப் படுவதாக முதலமைச்சர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்……

(வாய்ஸ்-ரங்கசாமி)

------------------------

நமஸ்தே 2 (6)

கருவடிக்குப்பம் காமராஜர் மணிமண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சமி நாராயணன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், தேசிய தூய்மைப் பணியாளர் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் திரு. பிரபாத் குமார், உழவர்கரை நகராட்சி ஆணையர் திரு. சுரேஷ் ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

------------------------

யோகா (17)

மத்திய ஆயுஷ் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மொரார்ஜி தேசாய் தேசிய யோகா கழகம் சார்பில், புதுச்சேரியில், கடற்கரை சாலை காந்தி திடலில் நாளைக் காலை நடைபெற உள்ள யோகா விழாவை, ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தொடக்கி வைக்கிறார். வரும் ஜூன் 21ஆம் தேதி நடைபெற உள்ள சர்வதேச யோகா தின விழாவிற்கான 25 நாள் முன்னோட்டத்தின் தொடக்கத்தை குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இவ்விழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோருடன், யோகா ஆர்வலர்கள், பிரமுகர்கள், மற்றும், மூத்த அதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர். உடல்நல மேம்பாட்டிற்கான, நடப்பு 10 ஆண்டுகளில், இவ்வாண்டு யோகா தினத்தை சிறப்பாக கொண்டாட, யோகா சங்கமம், யோகா பந்தன், யோகா பூங்கா, யோகா சமாவேஷ், யோகா மகா கும்ப் உட்பட. 10 முக்கிய நிகழ்ச்சிகளுக்கு மத்திய ஆயுஷ் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. வாழ்வின் எல்லா பிரிவுகளைச் சேர்ந்த எல்லா வயதினரும், யோகா தொடர்பான நிகழ்ச்சிகளில்

பங்கேற்று, வாழ்வின் ஒருபகுதியாக யோகாவை ஏற்கச் செய்யும் நோக்கத்துடன் இந்நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

------------------------

*புதுச்சேரி ஜாதவ் (8)*

புதுச்சேரி ஜிப்மரில், மத்திய பொதுப் பணித் துறை மூலம், 7.47 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ள, அவசர சிகிச்சை மற்றும் விபத்து சிகிச்சை கட்டிடத்தை, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ், நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார். துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர். நாள் ஒன்றுக்கு, 350 முதல் 400 பேருக்கு அவசர சிகிச்சை அளிக்கும் திறன் கொண்டதாக, இக்கட்டிடம் அமைந்துள்ளதாக ஜிப்மர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

*வானிலை (16)*

தென்மேற்கு பருவ மழை இன்று, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவி உள்ளது. வங்கக் கடலில் நாளை காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம் தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருப்பூர், திண்டுக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில், கனமழைக்கும், நெல்லை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், தேனி, தென்காசி மற்றும் குமரி மாவட்டத்தில் மிக கனமழைக்கும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஒருசில இடங்களில், அதி கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அடுத்த சில நாட்களுக்கு, பரவலாக மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. பலத்த சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்புள்ள வங்கக் கடல், மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கும்,

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளுக்கும் மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் 35 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

வறுமையை ஒழித்து பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்தியா செயல்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கழிவுநீர்த் தொட்டிகளை பாதுகாப்பான முறையில் சுத்திகரிப்பது குறித்து, புதுச்சேரியில், இன்று நடைபெற்ற, துப்புரவு பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

சர்வதேச யோகா தின விழாவிற்கான முன்னோட்டமாக புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ள யோகா தின விழாவை மத்திய அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தொடக்கி வைக்கிறார்.

ஜிப்மரில், புதுப்பிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு கட்டிடத்ததையும், மத்திய இணை அமைச்சர் நாளை, நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது